அந்தப் பஞ்சாயத்துக்களின் பெயர்களைச் சொல்லாமல் ஏழு பஞ்சாயத்துக்கள் என்று எந்தப் பஞ்சாயத்தின் பெயரையும் சொல்லாமல் கேட்டிருப்பதால் பதில் தெளிவாகச் சொல்லமுடியவில்லை. ஆனால் இப்போது விளக்கமாக பெயர்களைச் சொல்லிக் கேட்கிறார்கள். தனிக்கேள்வி போட்டால் அது குறித்து விரிவான பதில் தரப்படும்.

அனந்தநாறு கால்வாய் லைனிங் திட்டம்

*வினா எண். 157— திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் ஓடும் அனந்தநாறு (Lining Scheme) திட்டம் என்ன நிலையில் உள்ளது?

(ஆ) ஒதுக்கப்பட்டுள்ள பணம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) மற்றும் (ஆ): ரூ 246 இலட்சத்தில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனந்தனாறு கால்வாய் மற்றும் அதன் கிளைக் கால்வாய்களை சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மி. வின்செண்ட் : இந்தத் திட்டம் மூலம் எவ்வளவு ஏக்கர்கள் அதிகப்படியாக சாகுபடியாகிறது?, எவ்வளவு டன் உற்பத்தி அதிகரிக்கிறது என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் 3,600 ஏக்கர் இருபோக நன்செய் நிலங்களுக்கு பாசனவசதி உறுதிப்படுத்தவும் 2,300 ஏக்கர் இருபோக நன்செய் நிலங்களின் பாசனப் பற்றாக்குறையைப் போக்கவும் வகை செய்யப்படுகிறது

திரு. மி. வின்சென்ட்: இத்திட்டத்தைத் துவக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டதா? இதன் பெயரே அனந்தநாறுத் திட்டம். நாகர்கோவில் மக்கள் ஆனந்தமாக கொண்டாடுவதற்கு இந்தத் திட்டத்தை இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிந்தவுடனே ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இது ஒரு பயனுள்ள திட்டம் என்று அரசு கருதுகிறது. உணவு உற்பத்தியும் கிட்டதட்ட ஆண்டு ஒன்றுக்கு 7,080 டன் கூடுதலாகக் கிடைக்கும் என்ற காரணத்தால் நிச்சயமாக தைப்பொங்கல் கொண்டாடுவது போல் ஆனந்தமாகக் கொண்டாடுவதற்கு அரசுக்கு ஆட்சேபணையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1981 பிப்ரவரி 2]

திரு. டி. மணி : பாசனத்துறை பிரச்னை பற்றி, அனந்தநாறு திட்டம்பற்றிக் கூறினார்கள். இதேபோல் நெய்யாறு இடது கரைக் கால்வாயிலும், சித்தார்—பட்டணங்கால் கால்வாயிலும் சிமெண்ட் லைனிங் போடப்படாத இடங்களில் சிமெண்ட் லைனிங் போடுவதற்கு இந்த நிதி ஆண்டிலாவது அந்தத்திட்டத்தை விஸ்தரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தனிக்கேள்வி போடு மாறு கேட்டுக்கொள்கிறேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 158, 15 160 மாண்புமிகு தொழில் அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறன.

கூட்டுறவு வங்கியில் நகைக்கடன்களுக்கான வட்டிவீதம்

குறுகிய கால வினா எண். 3— திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு கூட்டுறவு— சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நலிந்த மக்களின் கடன் சுமையை முன்னிட்டு கூட்டுறவு வங்கிகளில் அவர்கள் அடகு வைத்துள்ள நகைக்கடன்கள் மீதான துள்ள வட்டி வீதத்தை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:—நலிந்த பிரிவினருக்கு குறிப்பாக கிராமங்களில் உள்ள ஏழை விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையில் கூட்டுறவு சங்கங்கள் வழங்கும் நகைக்கடன் களுக்கு வசூலிக்கப்படும் வட்டி விகிதத்தை 15 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக குறைக்க அரசு முடிவு செய்துள்ளது.

திரு. ஆர். மணிமாறன்: 15 சதவீதம் என்பது 14 சதவீதம் ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார் கள் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறேன். அதேபோல் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் நகைக்கடன்களுக்கு எவ்வளவு வட்டி வசூலிக்கப்படுகிறது? மாநில கூட்டுறவு வங்கிகள் வசூலிப்பதை விட அது அதிகமானதா அல்லது குறைவானதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகள் நலிந்த பிரிவினருக்கு நகைக்கடன்கள் (காடுப் பதில் 16%-ல் இருந்து 18% வரை வட்டி வசூலிக்கிறது. ஆனால் தமிழ்நாடு கூட்டுறவு வங்கிகளும் சங்கங்களும் நலிந்த பிரிவினருக்கு இதுகாறும் 15% என நகைக்கடனுக்காக வசூலிக்க பட்டு வந்த வட்டி விகிதத்தை தற்சமயம் 14% ஆகக் குறைத் திருக்கிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS